# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.14241/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.2009.</u>**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன், எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு V.ராமசாமி, எண்.16, பெரியார் தெரு, வீரவநல்லூர், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம் – 627 426. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர், இணை தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சேப்பாக்கம், சென்னை – 600 005. |

*****

மனுதாரர் திரு V.ராமசாமி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு P.நடராஜன், இணை தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சேப்பாக்கம், சென்னை இன்று (23.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 03.01..2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை அவர்களிடம் சில தகவல்களை வேண்டி மனுச் செய்துள்ளார். தகவல் பெறாததால் 04.03.2009 அன்று துறைக்கு மேல் முறையீடும் 05.03.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் அளித்துள்ளார். 16.05.2009 அன்று ஆணையத்திற்கு இரண்டாவது மேல் முறையீடும், 13.06.2009 அன்று மூன்றாவது மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (23.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரருக்கு உரிய தகவல்கள் தரப்பட்டதாகப் பொதுத் தகவல் அலுவலர் கூறியதை மனுதாரர் ஒப்புக் கொண்டார். கால தாமதம் குறித்துக் கேட்ட போது மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பல மனுக்கள் தொடர்ந்து

அனுப்புவதாகவும், அவ்வப்போது உரிய தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் கோரிய தகவல்கள் நான்கு பிரிவுவுளிலிருந்து 22 கோப்புகளைத் தேடிப் பார்த்துத் தர வேண்டியிருந்ததால் கால தாமதமானதாகவும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் நகல்கள் கேட்கப்படும்பொழுது ஒரு பக்கத்திற்கு ரூ.2/– என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் முதலில் அனுப்பிய ரூ.50/–க்கான வரைவோலை காணாமல் போனதாகவும், இரண்டாவது முறை ரூ.100/– அனுப்பியதாகவும் கூறினார். முதலில் அனுப்பிய ரூ.50/– அலுவலகத்திற்கு வந்துசேரவில்லையென்பதையும், அடுத்து அனுப்பிய ரூ.100/– கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளதையும் கோப்புகளின் மூலம் ஆணையம் உறுதி செய்தது. உரிய பக்கங்களைக் குறிப்பிடாமல் ரூ.50/–க்கு வரைவோலை அனுப்பும்படி பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் ஏற்கவில்லை. இனி வருங்காலங்களில் எத்தனை பக்கங்களின் நகல்கள் கேட்கப்படுகின்றனவோ அதற்கு உரிய பக்கங்கள் குறிப்பிடப்பட்டு, உரிய தொகை சரியான முறையில் கணக்கிட்டுப் பெறப்பட வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மனுதாரர் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டதால் வழக்கு இத்துடன் முடிவடைகின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>**வழக்கு எண்.14241/விசாரணை/2009**</u>

பொதுத் தகவல் அலுவலர்,
இணை தலைமைப் பொறியாளர்,
நெடுஞ்சாலைத் துறை,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

திரு V.ராமசாமி,
எண்.16, பெரியார் தெரு,
வீரவநல்லூர், அம்பாசமுத்திரம்,
திருநெல்வேலி மாவட்டம் – 627 426.

“*ptl*”